வேலைவாய்ப்புத் துறை, நாள் 13-9-2011-ன்படி சென்னை, தொழில் தீர்ப்பாயத்தின் தீர்விற்கு அனுப்பியது. அத்தாவா 1,803 பஞ்சாலைகளை உள்ளடக்கியது.

3. பஞ்சாலை தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்க தொழிற்தகராறுகள் சட்டப்பிரிவு 10-B-யின்கீழ் அரசாணை (டி) எண் 690, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 13-9-2001-அன்றைய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேற்கண்ட அரசாணைகளை ஆட்சேபித்து, சுமார் 400-க்கும் மேற்பட்ட ரிட் மனுக்கள் பஞ்சாலை நிர்வாகங்களினால் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அவ்வாறு தொடரப்பட்ட வழக்குகள் எல்லாம் முடிவுற்று, தற்போது 19-4-2010 அன்று உயர் நீதிமன்றம் அரசாணைகள் இரண்டும் சட்டப்படியானவை, செல்லத்தக்கவை என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு குறித்த இத்தொழிற்தாவா சென்னை, தொழில் தீர்ப்பாயத்தின் முன்பு தற்போது நிலுவையில் உள்ளது. தீர்ப்பாயத்தின் தீர்வைப் பொறுத்தே ஊதிய உயர்வு வழங்குவது குறித்து முடிவு மேற்கொள்ள இயலும்.

252—

பணி மூப்பு வழங்குதல்

வினா எண் 274—திரு. எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்ற மாணவர்கள் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைப்போல் நிறைவு செய்தவர்கள் பதிவு மூப்பை இழக்க நேர்ந்ததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லபாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் படித்தவர்களுக்கும், அரசு ஆசிரியர் பயிற்சி

நிறுவனங்களில் படித்தவர்களுக்கும் இடையே பாகுபாடு ஏதுமின்றி அரசுத் துறையினால் வழங்கப்படும் அனைத்து ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்களும் பதிவு செய்யப்பட்டு, பதிவு செய்த தேதியின் அடிப்படையில் பதிவு மூப்பு வழங்கப்படுவதால், தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்றவர்கள் பதிவு மூப்பை இழக்கும் நேர்வு எழ வாய்ப்பில்லை. இதுபோன்ற நேர்வு ஏதும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. மேலும், அரசாணை (நிலை) எண் 276, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (டிஇ-2) துறை, நாள் 24-12-2010-ன்படி, கல்விச் சான்றிதழ்களின் உண்மைத் தன்மைக்கும் பதிவுதாரரே பொறுப்பாளர் என்ற அடிப்படையில் அனைத்து கல்விச் சான்றிதழ்களும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) மேலே சொல்லப்பட்ட சூழ்நிலையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை எழவில்லை.

253—

தொழிற்பயிற்சி பள்ளி அமைத்தல்

வினா எண் 1653—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதியில் தொழில் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லபாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தற்போது தமிழ்நாட்டில் திறன்மிகு தொழிலாளர்களின் தேவை அதிக அளவில் உள்ளதால், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் அரசின் சார்பில் கூடுதலாக தொடங்கப்பட வேண்டியுள்ளன என்றும், இந்த ஆண்டு பத்து புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படும் என்றும்

2012 மே 16]

அறிவிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம், தளி பகுதி பழங்குடி இன மக்கள் வசிக்கும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், அரசு அறிவித்துள்ள பத்து புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுள் ஒன்றினை தளி பகுதியில் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்யுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அவரின் அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் உரியவாறு பரிசீலனை செய்து, அரசு தகுந்த ஆணை பிறப்பிக்கும்.

254—

ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்தல்

வினா எண் 45—திரு. அ. நாஞ்சில் முருகேசன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராஜாக்கமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட ராஜாக்கமங்கலம் மற்றும் கணபதிபுரம் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், ராஜாக்கமங்கலம் வட்டார ஒன்றியம், ராஜாக்கமங்கலம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் அறுவை அரங்குடன் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இதே வட்டார ஒன்றியத்திலுள்ள கணபதிபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

255—

துணை சுகாதார நிலையங்கள் அமைத்தல்

வினா எண் 62—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*